செ.வெ.எண்: 329 13/4/2010

# பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை–600 006.

## செய்திக்குறிப்பு

பணிக்காலத்தில் உயிரிழந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர் களுக்கு கருணை அடிப்படைப் பணிநியமனங்கள் தடை செய்யப்பட்டிருந்தது.

பணிநியமனத்திற்கான தடை இவ்வரசால் **2006**ஆம் ஆண்டு முதல் விலக்கப்பட்டு, கடந்த நான்கு ஆண்டுகளில், பள்ளிக்கல்வித்துறையில் கீழ்க்காணும் விவரப்படி பணிநியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இளநிலை உதவியாளர் பணியிடங்கள் | 208 |
| தட்டச்சர் பணியிடங்கள் | 22 |
| ஓட்டுநர் பணியிடங்கள் | 15 |
| அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படைப்பணியாளர் பணியிடங்கள் | 188 |
| கூடுதல் | 433 |

**13–04–2010** அன்று பிற்பகல் **2.00** மணியளவில் தலைமைச் செயலகத்தில் **மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களால்** கருணை அடிப்படையின் கீழ் **16** நபர்களுக்குப் பள்ளிக்கல்வித்துறையில் தட்டச்சர் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன. கடந்த நான்கு ஆண்டுகளில் இவர்களையும் சேர்த்து பள்ளிக் கல்வித் துறையில் **449** நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. அவ்வமயம் **பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திரு. எம். குற்றாலிங்கம்** அவர்களும், பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் **முனைவர்.பெ.பெருமாள்சாமி** அவர்களும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கக கூடுதல் இயக்குநர் திரு. **ஆர். கருணாகரன்** அவர்களும் உடனிருந்தனர்.

13/4

**பள்ளிக் கல்வி இயக்குநர்**